1982 மார்ச் 17]

உலக வங்கி உதவியுடன் ஏரிகளை மேம்பாடு செய்யும் திட்டம்

வினா எண். 456:—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

உலக வங்கி உதவியுடன் தமிழ்நாட்டில் ஏரிகள் மேம்பாடு செய்யும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: ஆம் 500 ஏக்கர் அல்லது அதற்கு மேற்பட்ட ஆயக்கட்டுகளுக்கு பாசனவசதி தரக்கூடிய 500 கண்மாய்களை உலக வங்கியின் உதவியுடன் நவீனப்படுத்தும் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

(முற்பகல் 9-50)

திரு. கே. ஆர். சுந்தரம்: 500 ஏக்கருக்கு மேற்பட்ட ஆயக்கட்டுகளுக்கு பாசனவசதி தரக்கூடிய கண்மாய்களை நவீனப்படுத்தும் திட்டம் உள்ளது என்று சொன்னார்கள். குடியாத்தத்தில் உள்ள பாக்கம் ஏரியை பெரிய ஏரியை ஆழப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. அதை இந்தத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ள அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: உலக வங்கியிடம் நாம் நிதி உதவி பெறுவதற்கு முன்னால் அவர்கள் சில குறிப்புகளை கொடுத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் சில முன்னோடித் திட்டங்களை எடுத்து செயல்படுத்தி வருகிறோம். அதன்படி செங்கல்பட்டு மாவட்டத்தில் பிள்ளைப்பாக்கத்திலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் கள்ளக்குடியிலும், ஏரிகள் நவீனப்படுத்தும் முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கட்டிக்குளம் ஏரியை நவீனப் படுத்தவும் இப்போதுஅதைப் பயன்படுத்தி அதுவும் முன்னோடித் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. முன்னோடித் திட்டத்தின் ஒருஅறிக்கை இப்போது கிடைத்திருக்கிறது. இரண்டு ஏரிகளின் அறிக்கைகளும் கிடைத்து இந்த முன்னோடித் திட்ட அறிக்கைகளைஅடிப்படையாக வைத்து உலக வங்கிக்கு திட்டங்கள் தயார் செய்வோம்.

திரு. மா சின்னராஜ்: இதுபோன்று உலக வங்கி நிதி உதவி பெறுவதோடு இன்னும் மற்ற பைனான்ஷியல் ஏஜென்ஸீஸ் உதவிகளைப் பெறுவதோடு நீர்ப்பாசனத் துறையில் சிறு பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஒரு நீர்ப்பாசன வாரியம் அமைத்துவிட்டால் சாதகமாயிருக்கும் என்று சொல்லப்படுகிறது. அதுபோன்ற ஒரு கருத்தை அரசு பரிசிலனைக்கு எடுத்துக் கொண்டு சிறுபாசனத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நீர்ப்பாசன வாரியம் ஒன்றை அமைக்க முன்வருமா?

மாண்புமிகு திரு கே. இராஜாமுகமது: மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்வியில் உள்ள ஒரு சிறப்பு அம்சம் நிதி உதவி பெறுவதில், இந்தத் துறை மூலம் எத்திட்டங்களை நாம் உருவாக்கினாலும் அரசுதான் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியிருக்கிறகிறது, ஆனால் ஒரு வாரியம் இருக்குமேயானால் உலக வங்கியிடமிருந்தோ அல்லது வேறு வங்கிகளிடமிருந்தோ உதவி பெற்று அது ஒரு கமர்ஷீயல் வெஞ்சராக இருக்கவேண்டும் என்று அந்தக் கருத்தை உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள் என்று கருதுகிறேன். அது ஒரு நல்ல கருத்து. அரசு அதை நிச்சயமாகப் பரிசீலனை செய்யும்.

திரு. இல. பலராமன்: உலக வங்கி மூலம் வாங்கக் கூடிய கடன்கள் மூலம் நவீனப்படுத்தும் ஏரிகளில் என்னென்ன காரியங்களுக்காக அரசு அதைப் பயன்படுத்தியிருக்கிறது என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: உலக வங்கி உதவி செய்கிறபோது சில நிபந்தனைகளைச் சொல்கிறார்கள். அது குறித்து நம் பாரதப் பிரதமர் அவர்கள் கூட ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். உதவி செய்கிறபோது சொல்கிற அந்த நிபந்தனைகளில் அரசியல், சமூகப் பார்வைகள் கலந்து விடக்கூடாது என்று. உலக வங்கி இந்த நவீனப்படுத்தும் திட்டத்தில் முதலில் 25 ஏக்கருக்குக் குறையாமல் ஒரு யூனிட்டாக எடுத்துக் கொண்டு நவீப்படுத்தவேண்டும் என்று சொல்கிறார்கள். அது உடைமையாளர்களுக்கு சாதகமாக இருக்குமே தவிர சிறு நிலம் வைத்திருக்கக்கூடிய ஏழை விவசாயிகளுக்கு அது சாதகமாக இருக்காது. இதில் மண்வளம், போன்ற அடிப்படை கொள்கைப் பிரச்னை இருக்கிறது. இருந்தாலும் கூட முன்னோடித் திட்டம் என்ற பெயரால் 25 ஏக்கர் ஒரே யூனிட்டாக இல்லாவிட்டாலும்கூட அந்தந்த உடைமையாளர்கள் உரிமையைபாதிக்காத அளவிற்கு அந்த நவீனப்படுத்துகிற நிலைமைக்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். அதோடு சிறிய கால்வாயாக இருந்தாலும்கூட காரை பூசி நவீனப்படுத்தி அந்தத் தண்ணீரை கொண்டு வந்து சேர்க்க வேண்டும் என்று நிபந்தனையில் சொல்லியிருக்கிறார்கள். அதைதான் இப்போது பரீட்சார்த்தமாகச் செய்து கொண்டிருக்கிறோம் அது வெற்றிகரமாக இருந்தால் அத்திட்டத்தின் அடிப்படையில் நாம் கடன் உதவி பெற முயற்சி செய்வோம்.

விளாத்தி குளத்தில் நூற்பாலை ஏற்படுத்துதல்

*வினா எண்.529—திரு. ரா. கு பெருமாள்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதியைச்சேர்ந்த வைப்பார், கீழ் வைப்பார், பொதுமக்கள் அரசு நூற்புஆலை அமைத்து வேலை வாய்ப்பு ஏற்படுத்த நூறு ஏக்கர் நிலமும்' பங்குத் தொகை ரூபாய் ஒருலட்சமும் இனாமாக கொடுக்க முன் வந்தும் இதுவரை ூரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்காத காரணம் என்ன?